# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 27.07.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இறையருளால் நாம் இன்றைய நாட்களில் ரமலானின் அருளுக்குரிய மாதத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். இந்த அருளுக்குரிய மாதத்திலிருந்து பலன்பெறக் கூடியவர்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவர். இந்த அருள், நோன்பின் உண்மைத் தன்மையினை புரிவதன் மூலமும், மேலும் அதிலிருந்து முழுமையாகப் பலன் பெறுவதன் மூலமாகத்தான் கிடைக்கப் பெறும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த கூற்றும் உண்மைதான். அதாவது, ரமலானுடைய மாதம் வரும்போது சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படும். நரகத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டு விடும். மேலும் ஷய்த்தான் பிணைக்கப்பட்டு விடுவான்.

ஆனால், எல்லாருக்கும் இந்த வாசல்கள் திறக்கப்படுமா? எல்லாருடைய ஷய்த்தானும் பிணைக்கப்பட்டு விடுவானா? எல்லாருக்கும் நரகத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டு விடுமா? நிச்சயமாக எல்லாருக்கும் அவ்வாறு நடக்காது. மாறாக, இங்கு நம்பிக்கையாளர்களைக் குறித்து கூறுகின்றார்கள். ஆனால் இங்கு ஒரு கேள்வி எழுகிறது. அதாவது வெளிப்படையாக ஈமான் கொண்டதால், முஸ்லிமானதால், நோன்பு வைப்பதால் இந்த அருளை மனிதன் பெற்று விடுவானா? இது மட்டும்தான் என்றால், பிறகு அல்லாஹ் நம்பிக்கை கொள்வதுடன் மீண்டும் மீண்டும் அஃமாலே ஸாலிஹா என்ற நற்செயல்கள் செய்வதன் பக்கம் அதிக அளவு கவனமூட்டியுள்ளான். அதிக அளவு அறிவுரையும் கூறியிருக்கின்றான்.

மாறாக அல்லாஹ் எல்லா மனிதருக்கும், அவர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, அவர் நற்செயல்கள் செய்யக் கூடியவராக இருந்தால் நற்கூலி பெறுவார் எனக் கூறியுள்ளான். எனவே, நோன்பை மட்டும் வைப்பது அல்லது ரமலான் மாதத்தைக் கடப்பது மனிதனை சுவர்க்கத்தின் வாரிசாக்காது. மாறாக இதனுடன் சில கடமைகளும் உள்ளன. அதனை நிறைவேற்றுவது அவசியமாகும். சில நிபந்தனைகளும் உள்ளன. அதன்படி அமல் செய்வது அவசியமாகும். நற்செயல்களின் பக்கம் கவனம் செலுத்துவதும் அவசியமாகும். இவற்றை செய்து வருவது ஒரு மூஃமின் மீது கடமையாகும். இல்லையென்றால் காலையில் சாப்பிட்டு விட்டு மாலை வரை எதுவும் சாப்பிடாமல் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட மக்கள் பலர் உள்ளனர். அவர்கள் காலையில் சாப்பிடுவார்கள். அடுத்து மாலையில் சாப்பிடுவார்கள். மேலும் பெயரளவில் உள்ள ஃபக்கீர்மார்கள் இதனைப் போன்று பழக்கத்தை ஏற்படுத்துவார்கள்; கடினத்தை மேற்கொள்வார்கள். மேலும் பல நாட்கள் பட்டினியாகவே இருப்பார்கள். ஆனால் இபாதத் மற்றும் நன்மைகள் அவர்களிடம் எதுவும் இருக்காது.

உலகில் சிலர் கஷ்டத்தின் சூழ்நிலையால் உண்ணாமல் இருக்கின்றார்கள். சிலரது நிலைமையும் ஒருவேளை உணவு மட்டும் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. சிலருக்கு மருத்துவர்கள், சில உணவுகளை உண்பதிலிருந்து தடுப்பார்கள். இதுவும் ஏறக்குறைய நாள் முழுவதும் எதுவும் உண்ணாமல் இருப்பதைப் போன்ற நிலையேயாகும். சிலர் குறிப்பாக பெண்கள் டயட்டிங் (Dieting) ஆர்வத்தினால் நாள் முழுவதும் சாப்பிடுவதே இல்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு என்னிடம் ஒரு பெண் வந்தார்கள். எனது மகள் பருவத்தை அடைந்து விட்டாள். மேலும் அவளது மூளையில் (நான்) ஒல்லியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது. அதில் பைத்தியமாக இருக்கிறாள். ஏனென்றால் இன்றைய நாட்களில் இந்த மாதிரியான விசயங்கள் நடைபெற்று வருகின்றன. உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக அவள் சாப்பிடுவதை விட்டு விடுவதால், எனக்கு கஷ்டமாக இருக்கிறது. ஒரு நேரம் தான் சாப்பிடுகிறாள். அதுவும் மிகக் குறைவாக சாப்பிடுகிறார்கள். ஏறக்குறைய ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதத்தில் 14, 15 பவுண்ட் எடையைக் குறைத்திருக்கிறாள். இது அந்த தாயின் கவலையாகும். மேலும் அந்தப் பெண் தற்போது ரமலான் மாதமும்

வந்து விட்டது. இதில் காலையிலிருந்து மாலை வரை நோன்பு வைத்தால் நன்மையும் கிடைத்து விடும். மேலும் ரமலானுடைய மாதம் ஆகும். ஷய்த்தான் பிணைக்கப்பட்டிருக்கின்றான். நன்மையும் கிடைத்து விடும். மேலும் இரண்டு குறிக்கோள்களும் நிறைவேறி விட்டன என நினைக்கலாம்.

மேலும் எனது பார்வையில் சிலர் உள்ளனர். அவர்கள் நோன்பு வைப்பார்கள். பிறகு நாள் முழுவதும் வேறெந்த வேலையும் செய்யமாட்டார்கள். தூங்கிக் கொண்டே இருப்பார்கள். நோன்பின் கஷ்டத்தை உணரக்கூடாது என நினைப்பார்கள். மேலும் நன்மைக்கான நற்கூலியும் கிடைத்து விடும் என நினைக்கின்றனர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ரமலான் வந்து விட்டது. நோன்பு வையுங்கள். ஷய்த்தான் பிணைக்கப்பட்டு விட்டான். சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு விட்டன. நரகத்தின் வாசல்கள் மூடப்பட்டு விட்டன. இதில் நற்செயல்களைச் செய்ய வேண்டும் என்பது இருக்கிறது. உங்களுடைய இந்த அமல் உள்ளது. அதாவது காலையில் சஹர் சாப்பிடுகிறீர்கள். இறைவன் கட்டளையிடுகின்றான்; சாப்பிடுமாறு கூறுகின்றான்; சாப்பிடுங்கள். மாலையில் இஃப்தார் செய்கின்றீர்கள். நான் கூறியது போன்று சிலர் தொடர்ச்சியாக நோன்பு நோற்கின்றனர். இன்னும் சிலர் நிர்பந்தத்தின் காரணமாக நோன்பு நோற்க்கின்றனர்.

ஆனால், இதன் மூலம் உங்களுக்கு நோன்புடைய நன்மை கிடைத்து விட்டது என்று நினைக்காதீர்கள் அல்லது உங்களது ஷய்த்தான் பிணைக்கப்பட்டுள்ளான் என்றோ அல்லது சொர்க்கத்தின் வாசல்கள் உங்கள் மீது திறக்கப்பட்டது என்றோ, மேலும் நரகம் தடுக்கப்பட்டு விட்டது என்றோ நினைக்காதீர்கள்.

நோன்பின் மாதத்திலிருந்து நற்செயல்களும் செய்யக்கூடியவர்தான் பலன் பெறுவார். அல்லாஹ் அச்சத்தையும், பயத்தையும் உள்ளத்தில் கொண்டவாறு நோன்பு வைத்து, இதனுடன் தனது ஒவ்வொரு அமலையும் இறைவனது விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ள முயற்சி செய்பவர்தான் பயனடைவார்.

மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனையும் கூறியுள்ளார்கள்: அதாவது ஈமானுடைய நிலையில் தன்னை ஆராய்ந்தவாறு நோன்பு வைப்பவனுடைய நோன்பு ஏற்றுக் கொள்ளப்படும். அவனுக்கு சொர்க்கம் அருகில் கொண்டு வரப்படும். அவனுடைய ஷய்த்தான் பிணைக்கப்படுவான். எனவே இந்த விசயங்கள், அதாவது எங்கு நோன்பு வைப்பது நன்மை செய்வதன் பக்கம் முன்பை விட அதிகமாக கவனமூட்டக் கூடியதாக இருக்குமோ, அங்கு தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பது, தனது தீய செயல்களை விட்டு விடுவதன் பக்கமும் ஒரு மூஃமினுக்கு கவனம் இருக்கும். அதற்காக அவன் முயற்சிகளை மேற்கொள்வான்.

ஒரு மூஃமின் தனது இபாதத்துகளின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்வார். வெறும் கடமைகளின் பக்கம் மட்டும் கவனம் செலுத்தமாட்டார். மாறாக, நஃபில்களின் பக்கமும் கவனம் செலுத்துவார். அதனை செயல்படுவதன் முழு உரிமையும் நிறைவேற்ற ஒரு மூஃமின் முயற்சி செய்வார்.

அடியானுடைய உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் ஏற்படும். பொருள் தியாகத்தின் பக்கமும் கவனம் ஏற்படும். ஏழைகளுடைய உரிமைகளை செலுத்துவதன் பக்கமும் முழு முயற்சி உண்டாகும். அப்போதுதான் நோன்பின் காலத்திலிருந்து சரியான பயனைப் பெற முடியும்.

பொருள் தியாகத்தைப் பற்றி பார்க்கும் போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி அறிவிப்பில் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் ரமலான் அல்லாத மாதங்களிலும் கூட வருடம் முழுவதும் எண்ணற்ற சதகா போன்றவற்றை செய்து வந்தார்கள். தியாகம் செய்து வந்தார்கள். மேலும் மற்றவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். அதில் அவர்களுக்கு இணையாக அன்னாருடன் எவரும் போட்டியிட முடியாது. ஆனால் ரமலான் மாதத்தில் வேகமான புயல் காற்றைப் போன்று அன்னாருடைய சதகா போன்றவைகள் இருந்தன; இபாதத்தின் தரமும் தனது எல்லையை மீறி நடைபெற்று வந்தது. ஒன்று, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இபாதத்துகளுக்கு எல்லை எதுவும் கிடையாது. மேலும் ரமலான் மாதத்தில் அவர்கள் புரிந்த இறை வணக்கம் அந்த உயர்வை விட மேலோங்கி இருந்தது.

எனவே அன்னார் நம்மிடம் கூறினார்கள்: ரமலான் வந்ததும் நோன்பை மட்டும் வைத்து விட்டு வேறு எதுவும் செய்யாமல் எல்லாம் கிடைத்து விட்டது என நினைக்காதீர்கள். அன்னார் இதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்:

நீங்கள் இதிலிருந்து உண்மையான பயனை எவ்வாறு அடைவீர்கள்? இதனைப் பற்றி ஏற்கனவே நான் கூறினேன். ஈமானின் நிலையில் தன்னை ஆராயக் கூடியவர்களுக்கு இந்த விசயத்தின் பக்கம் குறிப்பாக நான் கவனமூட்ட விரும்புகின்றேன்.

எவர் ஒருவர் பொய் சொல்வதிலிருந்தும், அதன்படி அமல் செய்வதிலிருந்தும் தவிர்ந்திருக்க மாட்டாரோ அல்லாஹ்வுக்கு அவர் பசியுடனும், தாகத்துடனும் இருப்பதற்கு எந்தத் தேவையுமில்லை.

அதாவது இப்படிப்பட்ட நோன்பு வீணானதாகும். எனவே ஷய்த்தான் பிணைக்கப்பட்டிருக்கின்றான் என நாம் மகிழ்ச்சி அடையக் கூடாது. நோன்பின் தரத்தை மேம்படுத்த வேண்டியதும் அவசியமாகும். நோன்பின் உரிமைகளை நிறைவேற்றுவதும் அவசியமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பொய் சொல்வதிலிருந்தும் அதன்படி அமல் செய்வதிலிருந்தும் தவிர்ந்திருக்காதவரின் நோன்பு, நோன்பாக ஆகாது எனக் கூறியுள்ளார்கள். இந்த வார்த்தைகளில் சின்னச்சின்ன தீமைகளிலிருந்து, பெரிய பெரிய தீமைகள் வரை கவனமூட்டப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதருக்கு எல்லா நிலையிலும் உண்மையின் மீது நிலைத்திருக்க வேண்டும் எனக் கூறி, அவரை அவரது அனைத்து பலவீனங்களிலிருந்தும், தவறுகளிலிருந்தும், பாவங்களிலிருந்தும் தூய்மை அடையச் செய்து விட்டார்கள். இதற்குரிய உதாரணங்களும் உள்ளன.

எவரிடம் நீர் உண்மையில் நிலைத்திருக்க வேண்டும் என கூறினார்களோ அவரது எல்லா விதமான ஒழுக்க, ஆன்மீக பலவீனங்கள் போன்றவை அவர் உண்மையின்படி நிலைத்திருக்க எடுத்த உறுதியின் மூலம் விலகி விட்டன. பிறகு இதனையும் பாருங்கள். அல்லாஹ் பொய்யை இணை வைத்தலுக்கு சமமாகக் கூறியுள்ளான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

*எனவே நீங்கள் சிலை வணக்கமான இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்; பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்.(22:31)*

இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அதாவது சிலைகளின் அசுத்தத்திலிருந்தும் பொய்யின் அசுத்தத்திலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்.

கூறுகின்றார்கள்: சிலைகளை வணங்குவது மற்றும் பொய் கூறுதல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். ஏனென்றால் பொய்யும் ஒரு சிலை ஆகும். அதன் மீது நம்பிக்கை வைக்கக் கூடியவன், இறைவன் மீதுள்ள நம்பிக்கையை இழக்கின்றான். எனவே பொய் பேசுவதன் மூலம் இறைவனும் கை விட்டுச் சென்று விடுவான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பொய் பேசுபவனது மற்றும் அதன்படி அமல் செய்யக்கூடிய உனது நோன்பு, நோன்பு ஆகாது. ஏனென்றால் ஒரு பக்கம் நோன்பு வைக்கக் கூடியவரது வாதம் என்னவென்றால், நான் இறைவனது கட்டளையின்படி நோன்பு வைக்கின்றேன். ஏனென்றால் இறைவன் நோன்புடைய கட்டளையைப் பற்றி கூறும் போது கூறுகின்றான்.

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் மீது நோன்பு வைப்பது கடமையாகும். எனவே நீங்கள் நோன்பு வையுங்கள்.

ஆக, ஒரு பக்கம் இறைவனது கட்டளையின்படி நோன்பு நோற்கின்றேன். ஆனால் மறுபக்கம் எவனது கட்டளையின்படி நோன்பு நோற்கப்படுகிறதோ, அவனுக்கு எதிராக பொய் என்னும் சிலை இணையாக நிறுத்தப்படுகிறது. எனவே இந்த இரண்டும் ஒன்றுசேர முடியாது.

மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனையும் கூறியுள்ளார்கள். அல்லாஹ் கூறுகின்றான்: மனிதனுடைய அனைத்து அமல்களும் அவனுக்குரியதாகும். ஆனால் நோன்பு எனக்குரியதாகும். எனவே நானே அதற்கு கூலி ஆவேன்.

எனவே இந்த விசயம், அதாவது எந்தவொரு வேலை இறைவனின் கட்டளைகளின்படி செய்யப்படுகினறதோ, மேலும் அது இறைவனுக்காகவும், அவனது அன்பினை ஈர்ப்பதற்காகவும் செய்யப்படுகிறதோ, மேலும் அதில் எனது நோன்பின் கூலி இறைவன் ஆவான் என நம்பிக்கையும் வைக்கப்படுகிறதோ அந்தக் கூலிக்கு எல்லை எதுவும் இருக்காது. பிறகு சாதாரண வாழ்வில் தனது பேச்சில் பொய்யை இணைத்து விட்டால், அமலில் பொய்யை இணைத்து விட்டால் எவ்வாறு சரியானதாக இருக்கும்?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வாயினால் பொய் சொல்லக்கூடாது என கூறவில்லை. மாறாக அமலுடைய பொய்யையும் இணைத்துள்ளார்கள். அமலின் பொய் என்னவென்றால், மனிதன் கூறுவதனை செய்வதில்லை. நோன்பில் இபாதத்துகளின் தரம் உயர வேண்டும். ஆனால் அதற்காக மனிதன் முயற்சி எதுவும் செய்யவில்லை என்றால், முன்பு வாழ்ந்தது போன்றே வாழ்கிறான் என்றால், அது அமல் ஆகாது.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நோன்பாளியுடன் யாராவது சண்டையிட்டால் அவரிடம் நான் நோன்பாளி என கூற வேண்டும். வேறெந்த பதிலும் அளிக்கக் கூடாது. இது நோன்பின் உரிமையாகும். அது இவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால் முன்னர் வந்து சண்டையிடுபவருடன் சண்டைக்கு பதில் கொடுத்தால் அது பொய்யான அமலாகும். தனது செயலின் உரிமை நிறைவேற்றப்படவில்லை என்றால், மற்றவருடைய உரிமைகள் நிறைவேற்றப்படவில்லை என்றால் அது அமலின் பொய் ஆகும். கணவன் – மனைவி இடையில் சண்டைகள் நடைபெறுகின்றன. அவர்கள் ரமலான் மாதத்தில், தமது தொடர்பை முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன், மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பரஸ்பரம் அன்பு, நேசத்தைப் பரிமாற வேண்டும். இறைவனது அன்பை பெற வேண்டும். இதன் மூலம் அல்லாஹ் தானே அதற்கு கூலி ஆக வேண்டும். இவ்வாறில்லாமல், நாங்கள் நோன்பு வைத்திருக்கின்றோம். இறைவனுக்காக வைத்திருக்கின்றோம் என்பதெல்லாம் வாய் அளவிலான வாதமாகும். ஆனால் அவர்களின் அமல்கள் இதனை பொய் ஆக்குகின்றன.

பிறகு அமலின் பொய்யில் இன்னும் பல விசயங்கள் உள்ளன. அதன் ஒரு உச்சநிலை இதுவும் ஆகும். அதாவது தனது வியாபாரம், உலக நோக்கம், தனது உலக பலன்களுக்காக நோன்பு வைத்திருந்து, தனது இபாதத்துகள், திக்ரே இலாஹி, நஃபில்களை நிறைவேற்றுவது மற்றும் திருக்குர்ஆன் ஓதுவது போன்றவற்றை விட அதற்கு முதன்மை வழங்குகின்றனர். இதனை விட அதிகமாக சில மக்கள் தனது இலாபத்திற்காக உலக நலனுக்காக வியாபாரங்களில் பொய் கூறுகின்றனர். ஒருவகையில் இறைவனுக்கு எதிரில் பொய்யிற்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள். எனவே இந்த அமலின் பொய் மற்றும் சொல்லின் பொய் போன்றவை இணைவைத்தல் ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்படிப்பட்ட நோன்பாளியுடைய நோன்பு உண்மையில் வெறும் பசியுடன் இருப்பதாகும். ஏனெனில் இறைவனிடம் அவனுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை.

எனவே நிச்சயமாக ரமலான் ஒரு புரட்சியைக் கொண்டு வருவதற்குக் காரணமாக அமைகின்றது. ஷய்த்தானும் இதில் பிணைக்கப்படுகின்றான். சுவர்க்கம் அருகில் கொண்டு வரப்படுகிறது. ஆனால் அதற்காக தனது நிலையில் தூய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். தனது ஒவ்வொரு சொல் மற்றும் செயலை இறைவனது விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இறைவனது அருகில் செல்ல முயற்சி செய்ய வேண்டும். இறைவனது ஆட்சியை தன் மீது நிலைநாட்ட முயற்சி

செய்ய வேண்டும். இதன் மூலம் இறைவனது ரஹ்மத், மன்னிப்பு, அருட்கொடை ஆகியவை சாதாரண நிலையை விட பல மடங்கு அதிகமாக்கி, முழுமையான பலன் பெற வேண்டும்.

மேலும் தனது நஃப்ஸின் சிலைகளை, பொய்த் தெய்வங்களை அறிந்தும் அறியாமலும் இறைவனுக்கு எதிராக நிற்கக் கூடியதை தூள் தூளாக்கி காற்றில் பறக்க விடுங்கள். பின்னர் இவ்வாறு முயற்சி செய்யும் போது ஒரு புரட்சி தம்மிடம் ஏற்படும். இறைவனுடைய ஆட்சிக்கு, நோன்புடன் இபாதத்துகளின் தரத்தை அடைவதும் அவசியமாகும். திருக்குர்ஆனை அதிகமாக ஓதுவதும், படிப்பதும், அதன் மீது சிந்தனை செய்வதும் அவசியமாகும். அதே நேரத்தில் அந்த இபாதத்துகளின் தாக்கம், திருக்குர்ஆன் ஓதுவதன் தாக்கம் தனது வெளிப்படையான நிலையிலும், நல்லொழுக்கத்திலும் தென்படுவது அவசியமாகும். இதன் மூலம் அமலின் உண்மைத் தன்மை வெளிப்பட வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

எனக்கு இப்போது நீங்கள் கொலை செய்யாதீர்கள் என அறிவுரை கூற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தீயவனைத் தவிர அநியாயமாக யார் கொலை செய்ய முயல்வார்? ஆனால் அநீதியில் நிலைத்திருந்து உண்மையை கொலை செய்யாதீர்கள் என்று நான் கூறுகின்றேன். உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள். அதனை ஒரு சிறுவனிடமிருந்து வந்தாலும் சரியே! எதிரிகளின் பக்கம் உண்மையைக் கண்டால் உடனே உங்களது பிடிவாதத்தை விட்டு விடுங்கள். இவன் எனது பகைவன் ஆவான். அவன் உண்மையைக் கூறினாலும் நான் எனது பிடிவாதத்தினால் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றெல்லாம் இருக்கக் கூடாது. மேலும் அதற்கு ஆதாரங்களை கொடுக்கவும் விவாதம் செய்யவும் கூடாது. மாறாக அவனை விட்டு விட வேண்டும். உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கூறுகின்றார்கள்: உண்மையில் நிலைத்திருங்கள். உண்மையான சாட்சியைக் கூறுங்கள்.

இதனைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:

*எனவே நீங்கள் சிலை வணக்கமான இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்; பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்.(22:31)*

கூறுகின்றார்கள்: எந்த விசயம் உங்களை உங்கள் நோக்கத்திலிருந்து திசை திருப்புகின்றதோ அதுவே உங்களின் பாதையில் சிலை ஆகும்.

உண்மையான சாட்சியைக் கூறுங்கள். ஒருவேளை உங்களது தந்தைகளுக்கு, சகோதரர்களுக்கு மற்றும் நண்பர்களுக்கு எதிராக இருந்தாலும் சரியே! எந்தவிதமான எதிர்ப்பும் உம்மை தடுக்க வேண்டாம். அதாவது எந்த விதமான பகைமையும் உண்மை பேசுவதிலிருந்து தடுக்க வேண்டாம்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: நாவின் தீங்கு மிகவும் கொடியதாகும். இதனால் தான் இறையச்சம் கொண்டவர் தனது நாவினை மிகவும் கட்டுப்படுத்தி வைத்திருப்பார். அவரது வாயிலிருந்து தக்வாவிற்கு மாற்றமான எந்தவித விசயமும் வெளி வராது. எனவே நீங்கள் உங்ளது நாவின் மீது ஆட்சி செய்யுங்கள். நாவு உங்கள் மீது ஆட்சி செய்யக் கூடாது. அதாவது உள்ளத்தில் தோன்றுகின்ற எல்லாவற்றையும் கூறிக் கொண்டிருக்கக் கூடாது. இதுதான் தக்வா ஆகும்.

இந்த தக்வாவின்படி செயல்படுவதற்கு இந்த ரமலானில் அதிக அளவு முயற்சிகள் செய்ய வேண்டும். இதன் மூலம் நாம் இறைவனது நெருக்கத்தைப் பெற வேண்டும். இதன் மூலம் திறக்கப்பட்ட சுவர்க்கத்தில் நாம் நுழைவது எளிமையாக வேண்டும். எனவே நம்மில் ஒவ்வொருவரும் ஆராய்ந்து பார்த்தால், தானாகவே உணர முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த வேதனை மிகுந்த இந்த தூது மற்றும் அறிவுரையின்படி எத்தனை பேர் அமல் செய்கின்றோம்? இதனை குறிப்பாக தனது ஜமாஅத்தார்களுக்கு தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கு தனது நூலான இஸாலே அவ்ஹாமில் கூறியுள்ளார்கள். ஒருவேளை நம்மில் ஒவ்வொருவரும் நீதியில் நிலை நின்றவாறு, உண்மைகளை கொலை செய்யப்படுவதிலிருந்து பாதுகாத்தால் நமது வீட்டுப் பிரச்சனைகளும் தீர்ந்து விடும். நம்மிடத்தில் சகோதரர்களுக்கு மத்தியில் அடிக்கடி

ஏற்படக்கூடிய மனஸ்தாபங்களும், கஸாவிற்கு வரக்கூடிய வழக்குகளும் முடிந்து விடும். குறைந்தபட்சம், நமது அஹ்மதி, சுற்றுப்புறத்தில் கொடுக்கல் வாங்கலிலுள்ள பிரச்சனைகளும் தீர்ந்துவிடும். இந்த அனைத்து பிரச்சனைகளும் உண்மையின்படி செயல்படாததன் காரணமாகவும், 'நான்' என்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதினாலும் ஏற்படுகின்றன.

**இதனால் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

தனது உண்மையின் தரத்தை இந்த அளவுக்கு உயர்த்த வேண்டும். அதாவது ஒரு சிறுவன் உண்மை கூறினாலும் கூட அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் பல்வேறு தீமைகளிலிருந்து நீங்கள் தவிர்ந்திருப்பீர்கள். பிறகு 'நான்' என்ற கர்வம் இருக்காது. ஒரு சிறுவன் எனக்கு அறிவுரை கூறுகின்றான். இந்த கண்ணியக் குறைவானவன் எனக்கு உண்மையின் பக்கம் வழிகாட்டுகின்றான். இந்த ஏழை மனிதன் எனக்கு உண்மையை எடுத்துக் கூறுகின்றான் என்ற எண்ணம் இருக்காது. எனவே உண்மையை ஏற்றுக் கொள்வதற்கும் தன்னடக்கம் வேண்டும். இந்த தன்னடக்கம் எப்படிப்பட்ட நன்மை என்றால் அது இறைவனுக்கு மிகவும் விருப்பமானதாகும்.

எனவே, உண்மையின் நன்மையுடன் எத்தனை நன்மைகள் பிறக்கின்றன என்பதைப் பாருங்கள். ஒரு நன்மைக்கு பிறகு மற்றொரு நன்மை பிறந்து கொண்டே செல்கிறது. இந்த விசயம்தான் இறைவனது விருப்பத்தினைப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கின்றது. மேற்கோள்களில் கூறப்பட்ட சில பகுதிகளில், மிகவும் முக்கியமான விசயமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கூறிய அறிவுரை இதுவாகும். எந்தவொரு விசயம் உங்களை சரியான திசையிலிருந்து, கிப்லாவிலிருந்து திருப்புகின்றதோ அது உங்களது பாதையில் சிலையாகும்.

நாம் ரமலானிலிருந்து முழுமையாக பலன்பெற வேண்டும் என்றால், நாம் ஷய்த்தான் பிணைக்கப்படுவது, நரகம் மூடப்படுவது, சுவர்க்கம் திறக்கப்படுவது போன்றவற்றிலிருந்து முழுமையாக பலன்பெற வேண்டுமென்றால் நாம் உண்மை பேசுவதன் நோக்கத்தை சரிசெய்ய வேண்டும். நமது கிப்லா இறைவனை நோக்கி இருந்தால், நான் உங்களுக்காக சொர்க்கத்தின் வாசல்களை, ரமலானின் பரக்கத்துகளின் காரணமாக திறந்து வைத்திருக்கின்றேன் என்ற அல்லாஹ்வின் அறிவிப்பிலிருந்து பலன்பெற முடியும். நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்த கூற்றின் மீது கவனம் செலுத்தி, அமல் செய்தால்தான் சொர்க்கத்தின் வாசல்கள் கிடைக்கும். சொல், செயலின் உண்மையான தரத்தை உயர்த்துங்கள். இதன் பக்கம் கவனம் இல்லையென்றால் இறைவனுக்கு நீங்கள் பசியுடனும், தாகத்துடனும் இருப்பதற்கு எந்த அவசியமுமில்லை. இது இறைவன் தனது அடியான் மீது புரிந்துள்ள அருள், கருணை மற்றும் இரக்கம் ஆகும். இபாதத்துகள், பல்வேறு நன்மைகளின் வழிகளை காட்டிக் கொடுத்து இதன்படி செயலாற்றக் கூடியவர்களுக்கு பரிசுகளையும் நிர்ணயித்துள்ளான். ரமலானின் மாதத்தில் இந்த இபாதத்துகள் மற்றும் நன்மைகளின் மூலம் இந்த பரிசுகளை பெறுவதற்குரிய எல்லைகளை விரிவாக்கி விட்டான். இது எல்லையற்றதாகும். அருள்களின் தொடர்ச்சியை அதிகமாக்கி விட்டான். வாருங்கள்! எனது விருப்பமான தோட்டங்களில் நுழையுங்கள் என்று கூறுகின்றான்.

நினைவில் கொள்ளுங்கள்! இதில் நுழைவதற்கு சொல், செயலின் உண்மையான வழியினை மேற்கொள்ள வேண்டும். இந்த கிப்லாவைப் பின்பற்றினால், எவ்வாறு இன்றைய வாகனங்களில் வழிகாட்டும் அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் சரியான இடத்திற்கு நீங்கள் சென்று விடுகின்றீர்கள்; சென்று அடைவீர்கள். இல்லையென்றால் ரமலான் வந்தும் கூட வழிதவறி விடுவீர்கள். மாறாக, சில சமயங்களில் உலக வழிகாட்டும் அமைப்புகளில் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. சில சமயங்களில் சரியாக Feed ஆகாமல் இருக்கும். புதிய வழிப்பாதைகள் உருவாக்கப்பட்டிருக்கும். அது கண்களுக்குத் தெரியாது. சில சமயங்களில் இரண்டு பாதையில் ஒரு பாதையின் பக்கம் மட்டுமே வழிகாட்டல் இருக்கும். பெரிய அளவில் சுற்றி வர வேண்டியது வரும் அல்லது சுருக்கமான வழிப்பாதையைத் தேடி மனிதன் தெருக்களை சுற்றி விடுவான். டிராஃபிக் வந்தடையும். ஆனால் இறைவனை நோக்கி கிப்லா சரியாக இருந்தால், பிறகு நேராக சொர்க்கத்தின் வாசல்கள் வரை மனிதன் சென்றடைவான்.

எனவே, இந்த ரமலானில் நம்மில் ஒவ்வொருவரும் தனது கிப்லாவை சரி செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். தனது சொல், செயலில் உண்மையான தரத்தை உயர்த்த வேண்டும். மேலும் இறைவனுக்கு விருப்பமான சொர்க்கத்தில் நுழைய முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! இந்த விசயத்தை நான் கொஞ்சம் சுருக்கி இருக்கின்றேன். இறைவன் நாடினால் மீதமுள்ளவற்றை அடுத்த ஜுமுஆவில் எடுத்துரைப்பேன்.

சுருக்க வேண்டிய காரணம் என்னவென்றால், தற்போது நான் நமது ஜமாஅத்தின் ஒரு நீண்டகால ஊழியரான நல்லடியார் பற்றி சில விசயங்களைக் கூற விரும்புகின்றேன். இவர் சில நாட்களுக்கு முன்பு மரணமடைந்தார்கள். இவர் கண்ணியத்திற்குரிய சவுத்ரி ஷப்பீர் அஹ்மது சாஹிப் ஆவார். பாகிஸ்தானில் ஒவ்வொரு அஹ்மதியும், ஒவ்வொரு ஜமாஅத்தின் பெரும்பான்மையினரும் அவரை அறிந்திருந்தார்கள்; அறிந்திருப்பார்கள். பழைய அஹ்மதிகள் அவர்களை கண்டிப்பாக அறிந்திருப்பார்கள்.

மிக நீண்ட காலமாக வகீலுல் மால் அவ்வல் என்ற நிலையில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. இவர் தற்போது ஜமாஅத்துடைய அமைப்பின் அடிக்கல்லாக இல்லா விட்டாலும் நடுவிலுள்ள செங்கல்லாக செயலாற்றியுள்ளார்கள். இவருக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடமிருந்து நேரடியாக தர்பிய்யத் பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இவர்கள் தன்னலமற்ற நிலையில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார்கள். இன்று நாம் சுவைக்கக்கூடிய கனிகளில் பழைய மக்களது தன்னலமற்ற தொண்டு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இவர்களைத் தவிர மற்றும் சில வஃபாத் ஆனவர்கள் உள்ளனர். அவர்களைப் பற்றியும் கூறுவேன். கண்ணியத்திற்குரிய சவுத்ரி ஷப்பீர் அஹ்மது சாஹிப் பற்றி சுருக்கமாக சில விசயங்களை எடுத்துரைக்கின்றேன்.

ஜுலை 22, 2012 அன்று தனது 95 வயதில் இவர் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவருடைய தகப்பனார் ஹஸ்ரத் ஹாஃபிஸ் அப்துல் அஸீஸ் சாஹிப், தாயார் ஹஸ்ரத் ஆயிஷா பேகம் சாஹிபா ஆவார். இருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்கள் ஆவார்கள். ஆனால் இவரது தந்தைவழிப் பாட்டனார் இரண்டாவது கிலாஃபத் காலத்தில் தான் பைஅத் செய்தார்கள். இவரது தந்தைவழிப் பாட்டனார் சவுத்ரி நபி பக்ஷ் சாஹிப், ஜம்முவைச் சார்ந்த ஒரு கண்ணியத்திற்குரிய மனிதராவார். முஸ்லிம்களின் மீது சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காரணத்தால் ராணி விக்டோரியாவின் காலத்தில் ஹிஜ்ரத் செய்து ஸியால்கோட் வந்தார்கள். ஷப்பீர் சாஹிபின் தந்தை மிகவும் உயர்ந்த நல்லொழுக்கம் கொண்ட மனிதர் ஆவார். திருக்குர்ஆன் மனனம் செய்த காரணத்தால் தனது பகுதியில் மிகவும் சிறந்து விளங்கினார். இதன் மூலம் தனது பிள்ளைகளின் தர்பிய்யத்தும் மார்க்க சூழலிலே வழங்கியுள்ளார்கள். சவுத்ரி ஷப்பீர் சாஹிப் தனது ஆரம்பக்கல்வியை ஸியால்கோட்டிலுள்ள ஸ்காட் மிசன் பள்ளியில் பயின்றார்கள். பிறகு 1931ல் 8ம் வகுப்பு தேர்ச்சி அடைந்ததும், இவரது தந்தை தர்பிய்யத்திற்காக காதியான் அனுப்பி வைத்தார்கள். இவர் காதியானிலுள்ள தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளியில் மெட்ரிக் பயின்றார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய நெருக்கத்திலிருந்து பல்வேறு பலனடைந்தார்கள். நஸ்ம் படிப்பதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார். பல சந்தர்ப்பங்களில் இவருக்கு அதற்கான வாய்ப்பு கிடைத்தது. வேறு பல நஸ்ம்கள் படித்திருந்தாலும் காதியானில் சீரத்துந்நபி கூட்டம் நடைபெற்ற போது முதன்முறையாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சொற்பொழிவிற்கு முன்பாக நஸ்ம் படித்தார்கள்.

அப்போது காதியானில் கல்லூரிகள் எதுவும் இல்லாததால் மெட்ரிக் படித்த பிறகு ஸியால்கோட்டிலுள்ள முர்ரே கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. தேர்ச்சி பெற்றார்கள். சிறிது காலம் காதியானில் தங்கியிருந்தார்கள். மவ்லவி ஷேர் அலி சாஹிபுடன் அலுவலகத்தில் பணிபுரிந்தார்கள். அப்போது மவ்லவி ஷேர் அலி சாஹிப் திருக்குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஈடுபட்டு வந்தார்கள். இவர்கள் அன்னாருடைய டைப்பிங் பணியை செய்து வந்தார்கள். நேர்மையாகவே வாழ்வை கழித்தார்கள். மிகவும் மக்களால் அறியப்பட்ட கவிஞரும் ஆவார். நஸ்மும் மிகவும் இனிய குரலில் படித்து வந்தார்கள். பேச்சில் இனிமையும், உழைப்பில் கடினமும், சுருக்கமாக நன்மைகளின் ஒரு தொகுப்பும் ஆவார்.

1940 மிலிடரி அக்கவுண்ட்ஸின் தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு 11 வருடங்கள் பணிபுரிந்தார்களா. ஆனால் 1944-ல் இந்த இடைப்பட்ட காலத்திலேயே தன்னை வக்ஃபிற்காக அர்ப்பணித்தார்கள். ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1950-ல் இவர்களை அழைத்து தானே நேர்காணல் எடுத்தார்கள். பிறகு இவர் தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு ரப்வா வந்தார். முதலில் நாயிப் வகீலாகவும் பிறகு 1960 முதல் வஃபாத் வரை வகீலுல் மால் அவ்வலாகவும் தொண்டாற்றி வந்தார்கள். 52 வருடங்கள் வகீலுல் மால் அவ்வலாகவும் அதற்கு முன்பு 10 வருடங்ள் நாயிப் ஆகவும் பணியாற்றியுள்ளார்கள். இரண்டாவது கிலாஃபத் முதல் தற்போது வரை பணிபுரிய அல்லாஹ் இவருக்கு வாய்ப்பினை வழங்கியுள்ளான்.

கிளை அமைப்புகளிலும் முழுமையாக தொண்டாற்றி வந்துள்ளார்கள். ரப்வாவில் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முதல் முஃதமித் மர்கஸியாக ஆனார். இதனைத் தவிர குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பல்வேறு பணிகளில் தொண்டாற்றியுள்ளார்கள். நாயிப் சதர் ஸப் தோயம் அன்ஸாருல்லாஹ்வாக இருந்துள்ளார்கள். மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் மத்தியக் கமிட்டியின் உறுப்பினராக மிக நீண்ட காலம் இருந்து வந்துள்ளார்களா. மஜ்லிஸ் கார்பிரதாஸ் உடைய உறுப்பினராகவும், காஸியாகவும் இருந்துள்ளார்கள். 1960ல் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களது மனைவியின் சார்பாக ஹஜ் செய்யக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. பல்வேறு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வந்துள்ளார்கள். இவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பு பல உள்ளன. 1965 முதல் 1983 வரை ரப்வாவுடைய வருடாந்திர மாநாடுகளில் இவருக்கு துர்ரே ஸமீனிலிருந்து நஸ்ம் படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இங்கும் U.K. ஜல்ஸாவில் 1986 மற்றும் 1998ல் இவருக்கு நான்காவது கலீஃபத்தின் மஸீஹ் அவர்களது காலத்தில் நஸ்ம் படிப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஒருமுறை நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவரது நஸ்மை கேட்ட பிறகு, தங்கள் பழைய ஜல்ஸாக்களின் அதாவது ரப்வா மற்றும் காதியானில் நடைபெற்ற ஜல்ஸாக்களை நினைவுபடுத்தி விட்டீர்கள் எனக் கூறினார்கள்.

இவர்களிடம் இருந்த ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் சுற்றுப்பயணம் செல்லும் போது தன்னுடன் புராஜெக்டர் மற்றும் வெளிநாடுகளின் மிஷன்களின் புகைப்படத்தின் ஸ்லைடர்ஸ் போன்றவற்றை எடுத்துச் செல்வார்கள். பெரிய பெரிய உரை நிகழ்த்துவதற்குப் பதிலாக உலகில் எங்கெல்லாம் நமது பள்ளிவாசல்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் கட்டப்பட்டு வருகிறது என இதனை திரையிட்டுக் காட்டுவார்கள். ஸ்லைடர்ஸ் நமது மக்களுக்கு தர்ப்பிய்யத்தின் பக்கமும் பொருள் தியாகத்தின் பக்கமும் கவனமூட்டியது. அங்கு சின்னச்சின்ன கிராமங்களிலிருந்தும் மற்ற மக்கள் வருவார்கள். பிறகு அதனைக் கண்டு அஹ்மதிய்யத் எவ்வாறு இஸ்லாத்திற்கு தொண்டாற்றி வருகிறது என்பதைப் பார்ப்பார்கள். இதன் மூலம் தப்லீகிற்கான வாய்ப்பும் கிடைத்து வந்துள்ளது. விவாதம், ஆதாரம் இல்லாமல் புராஜெக்டர் மூலமாக இவர் பல்வேறு தப்லீக் பணிகளைச் செய்துள்ளார்கள். தர்பிய்யத்தும், தப்லீகும் செய்து வந்துள்ளார்கள். தன்னிடம் ஆற்றல் இருந்த வரை இதனை செய்து வந்துள்ளார்கள்.

இங்கு 2009ன் ஜல்ஸாவிற்கு வந்திருந்தார்கள். அப்போது ஜுபிளி கிலாஃபத் நன்றி செலுத்தலுடைய அறிக்கை வாசித்துக் காட்ட இவருக்கு வாய்ப்பு கிடைத்தது. இதனைப் போன்று பல்வேறு ஜமாஅத்துகள் மூலமாக காலத்தின் கலீஃபாவுக்கு அதாவது எனக்கு ஜமாஅத்துடைய ஏதாவது பணியில் செலவழிக்கக் கொடுக்கப்பட்ட தொகையையும் எனக்கு வழங்குவதற்கு இவருக்கு வாய்ப்பு கிடைத்தது. இவரது ஒரு மகன் அமெரிக்கா ஜமாஅத்தின் முபல்லிக் ஆவார். இவர் வக்ஃபே ஸிந்தகி ஆவார். இரண்டாவது மகன் ரப்வாவில் திருமணத் தொடர்பு அலுவலகத்தில் உதவி நாஸிராக உள்ளார். மூன்றாவது மகன் ஆப்பிரிக்காவில் தற்காலிக அர்ப்பணிப்பு செய்திருந்தார். பிறகு இங்கு வந்து விட்டார். அவரது பெயர் ஃபஸ்ல் அஹ்மது தாஹிர் ஆகும். தற்போது இவர் U.K. ஜமாஅத்தின் தஃலீம் செயலராகவும் உள்ளார். இவருக்கு இந்த மூன்று மகன்கள் உள்ளனர். மகள்களும் இறை அருளால் ஜமாஅத்துடன் நல்ல முறையில் தொடர்பு கொண்டு வருகின்றனர். அவர்களது கணவர்மார்களும் கூட அவ்வாறே உள்ளனர்.

மேலும் இவரிடம் ஒரு சிறப்பம்சம் இருந்தது. அஹ்மதியல்லாத சொந்தங்களுக்கு இவரிடம் வரக்கூடிய பத்திரிகைகளை ஆட்சேபனை பற்றிய விவரங்களைக் கொண்ட பத்திரிகைகளை, பிரசுரங்களை எங்கிருந்தாலும் ஸியால்கோட் போன்ற இடங்களுக்கு அஞ்சல் அனுப்பி வந்தார்கள். அனைத்து சொந்தங்களின் முகவரியும் இவருக்கு மனனமாக இருந்தது. இதனைப் போன்று அல் ஃபஸ்ல் போன்ற பத்திரிகையையும் அனுப்பி வந்தார்கள். அலுவலகத்தில் உள்ள சக ஊழியர்களுடன் நல்ல முறையில் பழகி வந்தார்கள். ஒருமுறை இவர் உடல்நிலை சுகமில்லாமல் இருந்தார். பொதுவாக சைக்கிளில் தான் வருவார்கள். பிறகு மிகவும் உடல்நிலை சரியில்லாமல் போனது போது நான் தான் வாகனம் கொடுக்க வேண்டும் எனக் கூறினேன். ஒருவேளை அதற்கு முன்பும் அதனை உபயோகப்படுத்தி தான் வந்தார்கள. எவ்வாறிருப்பினும், அலுவலகத்திலுள்ள பணியாளர் அவரை அழைத்து வருவதற்கு வாகனத்தை அனுப்புவதில் தாமதம் ஏற்படுத்தி விட்டார். இவர் அறிவுரை கூறும் விதமும் தனிப்பட்டதுதான். வண்டி அனுப்ப ஏன் தாமதம் ஆனது என எதுவும் கூறாமல் ஒரு கவரில் கொஞ்சம் பாதாம் போட்டு கொடுத்தனுப்பி, இது உங்களது ஞாபகசக்திக்காக எனக் கூறினார்கள்.

இதைப் போன்று இவரது மகளும் கூறுகிறார்கள். வீட்டிலும் நிறைய அறிவுரைகளைக் கூறுவது அல்லது திட்டுவது, சத்தம் போடுவது, அதட்டுவது போன்றவை இல்லாமல் தனது செயலின் முன்மாதிரியை வெளிப்படுத்தி வந்தார்கள். தானே சீர்திருத்துவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். சில சமயங்களில் கதைகள் கூறி அதன் மூலம் சீர்திருத்தம் செய்து வந்தார்கள்.

இவரது ஒரு மகள் கூறுகிறார்கள். மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்பு கவிதைகள் இறங்குகின்றன; எழுதுங்கள் என்று அவர் கூறினார். இறைவனிடம் வேண்டுகோள்! அந்த கவிதைகள் இதுவாகும்.

*எனது இறைவா!*
*மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதில்,*
*எனது எஜமானனே!*
*மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதில்*
*என்னை அர்ப்பணம் ஆக்குவாயாக!*
*விடைபெற்றுச் செல்லும் நேரத்தை*
*எனக்காக நிம்மதியான நேரமாக்குவாயாக!*
*விடைபெற்றுச் செல்லும் நேரத்தை*
*எனக்காக எளிமையாக்குவாயாக!*
*விடைபெற்றுச் செல்வதை*
*மனநிறைவாக்குவாயாக!*

இது அவரது கடைசி கவிதையாகும். அவர் இறுதி நாட்களில் கட்டிலில் படுத்திருக்கும் போது கூறியதாகும்.

பிறகு இந்த சிறப்பம்சமும் அவரிடம் இருந்தது. அதாவது எப்போதும் நன்றி உணர்வுடன் இறைவனைப் புகழ்ந்து வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவர்களது வக்ஃபை ஏற்றுக் கொண்டதும் இவர்களிடம் அறிவுரை கூறினார்கள். இதனை ஒவ்வொரு வக்ஃபே ஸிந்தகியும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஜமாஅத்தின் பணிகளைப் பற்றி எவ்வாறு கவலைப்பட வேண்டும் என்றால் ஒரு தாய் தனது பிள்ளையைப் பற்றி கவலைப்படுவதைப் போன்று கவலைப்பட வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள்.

பிறகு இவர் இந்த அறிவுரையை நன்கு புரிந்தவாறு நல்ல முறையில் அமல் செய்தார்கள். எப்பொழுது நோய்வாய்ப்பட்டிருந்தாலும் வீட்டில் உள்ளவர்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள. மனைவியை நன்றாக கவனிப்பது போன்றவற்றை செய்து வந்தார்கள். ஆனால் மார்க்க விசயம் வரும்போது, சுற்றுப்பயணம் எதுவும் செல்ல வேண்டியதிருந்தால் அங்கு பல கஷ்டமான சந்தர்ப்பங்கள் அவருக்கு வந்தும், அவரது மனைவிக்கு உடல்நலம் குன்றிப்போன நிலையிலும், பிரசவ நேரமாக இருக்கக்கூடிய காலத்திலும்

மிகவும் இக்கட்டான சூழ்நிலையாக இருக்கும் போதும் கூட நான் இறைவனது மார்க்கத்திற்காக செல்கின்றேன். இறைவன் எனது பணியை இங்கு பார்த்துக் கொள்வான் என்று கூறிவிட்டுச் செல்வார்கள். அதனைப் போன்று இறைவனும் அவ்வாறே செய்து வந்தான்.

இதுவும் வெளிப்படையில் மிகவும் சின்னச்சின்ன விசயங்கள்தான். ஆனால் பழைய மனிதர்களின் இந்த விசயங்களிலிருந்து இன்றைய ஒவ்வொரு வக்ஃபே ஸிந்தகியும் பணியாளரும் பாடம் கற்க வேண்டும். ஜமாஅத் பொறுப்பாளர்களும் பாடம் கற்க வேண்டும்.

இவரது ஒரு இன்ஸ்பெக்டர் கூறுகிறார்: அவர் அலுவலகம் சார்பாக பைண்டிங் செய்யப்பட்ட நூல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு துர்ரே ஸமீன் நூல் கிடைத்தது. அதனை வெளியே எடுத்து அக்கவுண்டன்டை அழைத்து இது எனக்குரிய துர்ரே ஸமீன் ஆகும். இதனையும் நீங்கள் பைண்டிங் செய்து விட்டீர்கள். இதற்கு எவ்வளவு ரூபாய் செலவானது எனக் கூறுங்கள் என்றார். அக்கவுன்டர் இவை அனைத்தும் மொத்தமாக பைண்டிங் செய்யப்பட்டது என்றார். அவர் கூறினார். இல்லை, இல்லை. இதற்கு எவ்வளவு செலவானது என்பதை கண்டறியுங்கள் என்றார். கடைசியில் 8 அல்லது 10 ரூபாய் அதற்கு செலவானது எனக் கண்டறியப்பட்டது. அதனை அக்கவுண்டரிடம் ஒப்படைக்கும் வரை நிம்மதியற்றிருந்தார்கள்.

இதனைப் போன்று பணியாளர்களிடமும் மிகவும் மென்மையான முறையில் அறிவுரை கூறுவார் என்றும், யாருக்கும் கஷ்டமாக இருக்காது என்றும் சிறந்த முறையில் தர்பிய்யத் வழங்கி வந்ததாகவும் கூறுகின்றனர். பெரும்பாலும் அறிவுரை கூறி வந்தார்கள். இது மிகவும் நல்லவோர் அறிவுரை ஆகும். இதனை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். மார்க்கத் தொண்டினை அன்புடனும், ஆர்வமுடனும் செய்ய வேண்டும். இதற்குப் பதிலாக எந்த விதமான பரிசையும் எதிர்பார்க்கக் கூடாது. எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுக்கு தொண்டாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளான். நீங்கள் உங்கள் இறைவனை மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும். இதனைப் போன்று விருந்தினர்கள் வந்தால் மிகவும் கண்ணியத்துடன் எழுந்து நின்று வரவேற்பார்கள்.

பெரும்பாலும் கூறி வந்தார்கள். மர்கஸுக்கு வரக்கூடிய விருந்தினர்கள் சில நம்பிக்கைகளை எடுத்து வருவார்கள். அவர்களை நல்ல முறையில் சந்திக்க வேண்டும். உபசரிப்பு செய்ய வேண்டும். தனது பணியை விட்டு விட்டு அவர்களின் பக்கம் கவனம் செலுத்தி வந்தார்கள். எவ்வளவு நேரமானலும், அலுவலகம் மூடினாலும் எப்போது வரை விருந்தினரது வேலை முடியாதோ அப்போது வரை கூடவே இருப்பார்கள். அவ்வாறு இல்லையென்றால் உங்களுக்கு இதனைப் பற்றி பிறகு தெரிவிக்கப்படும் என்று கூறுவார்கள்.

சில விருந்தினர்கள்அல்லது அலுவலகம் வரக்கூடியவர்கள் சந்தா பிரச்சனையில், இங்குள்ள செகரட்டரி மாலுக்கும் அனுபவம் இருக்கும். சந்தாவுடைய கணக்கு சரியில்லை என்றால் அல்லது பதிவு சரியாக இல்லையென்றால் மக்கள் கோபம் அடைந்து விடுவார்கள். இவர்களிடத்தில் யாராவது கோபத்துடன் வந்தால், மிகவும் அமைதியாக அதனை கேட்பார்கள். கடைசியில் வந்தவர் வெட்கப்பட்டு மன்னிப்பு கேட்பார்.

பணியாளர்களுக்கும் தனது பிள்ளைகளுக்கும் சதகா கொடுப்பதன் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். இது துன்பத்தை தரக்கூடிய வழியாகும் என்பார்கள். பிறகு துஆவிற்கு காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுமாறு கூறுவார்கள். இதுவும் அவர்களது சிறப்பம்சமாகும். அவர்கள் தனது இன்ஸ்பெக்டர்களிடம் நீங்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போது உங்களது சொந்த வார்த்தைகளை கூறுவதை விட காலத்தின் கலீஃபாவின் தூதுச் செய்தியை எட்ட வையுங்கள் என்பார்கள். மேலும் தனது உதவியாளர்கள் அல்லது செயலர்களை சுற்றுப்பயணத்திற்கு அனுப்பும்போது நீங்கள் தலைமையகத்தின் பிரதிநிதி ஆவீர்கள். எனவே உங்களது ஒவ்வொரு சொல்லையும், செயலையும் கவனத்தில் வையுங்கள் என்பார்கள். சில சமயங்களில் அலுவலகத்தில் அதிக நேரம் செலவிட வேண்டியது இருந்தால், அலுவலகம் மூடப்பட்டு விட்டது. பணியாளர் தவறாக எண்ணக்கூடாது எனக்கருதி மிகவும் அழகிய முறையில் அறிவுரை கூறி வந்தார்கள்.

நீங்கள் மற்ற அலுவலகத்தில் உள்ளவர்கள் அலுவலகத்தை மூடி விட்டு வீட்டிற்கு சென்று விட்டார்கள். நாம் அலுவலகத்தில் பணிபுரிகின்றோம் என நினைக்காதீர்கள். மாறாக, அவர்கள் சென்று தனது நேரத்தை

வீணடிக்கிறார்கள். அல்லாஹ் நமக்கு அதிக அளவு தொண்டாற்றுவதற்கு வாய்ப்பளித்துள்ளான் என கருதுங்கள் என்பார்கள். இதுதான் மார்க்கத் தொண்டை இறையருள் என கருதுவதன் செயல்ரீதியான உதாரணமாகும்.

இவரது ஒரு பணியாளர் கூறுகின்றார்: வஃபாத்திற்கு நான்கு ஐந்து நாட்களுக்கு முன்பு உடல்நலம் விசாரிக்கச் சென்றேன். அப்போது என்னிடம் கூறினார்கள். நாஸிர் அஹ்மது என்ற பெயரைக் கொண்ட ஒருவர் எனது உடல்நலம் விசாரிக்க வந்தார். அவரை உங்களுக்கு தெரியுமா என்றார்கள். அப்போது நான் தஹ்ரீகே ஜதீதில் நாஸிர் அஹ்மது என்ற பெயரைக் கொண்டோர் 3, 4 பேர் உள்ளனர் என்றேன். அப்போது அவர்கள் கூறினார்கள். நேற்று என்னை நாஸிர் அஹ்மது சந்திக்க வந்தார். எனது பிள்ளைகள் நான் தூங்கிக் கொண்டிருக்கிறேன் என்று கூறினார்கள். எனவே அவர் திரும்பிச் சென்று விட்டார். அவர் யார் என்பதனைக் கண்டறியுங்கள். எனது சார்பில் மன்னிப்புக் கேளுங்கள். பிள்ளைகளுக்கு தவறு ஏற்பட்டு விட்டது. கண்கள் மூடியிருந்ததால் நான் தூங்கிக் கொண்டிருக்கிறேன் எனக் கருதி விட்டனர். நான் அப்போது தூங்கவில்லை. இந்த அளவு நுட்பமாக கவனத்தில் கொண்டுள்ளார்கள். தொடர்ந்து சதகா கொடுக்கக் கூடியவர். நான் இவரைப் பற்றி சுருக்கமாகக் கூறினேன். நானும் இவருடன் பணியாற்றியுள்ளேன். இங்கு எழுதப்பட்டுள்ள சிறப்பம்சங்கள் மிகக் குறைவானதே. இறை அருளால் இவர் பெரிய பெரிய சிறப்பம்சங்களைக் கொண்டவராவார். வேலைகளை முக மலர்ச்சியுடன் செய்து வந்தார்கள். கிலாஃபத்துடன் விசுவாசமுள்ள ஒரு தொடர்பைக் கொண்டிருந்தார்கள். எவ்வாறிருப்பினும் இந்த நல்லடியார் தனது பணியில் மூழ்கியிருந்தார். காலத்தின் கலீஃபாவுடைய சுல்தானே நஸீர் ஆவார். பிறகு இதனுடன் காலத்தின் கலீஃபாவுக்காக அதிக அளவில் துஆவும் செய்து வந்தார்கள்.

அல்லாஹ் இவரது தர்ஜாவை மேம்படுத்தவானாக! இதைப்போன்று பணியாற்றுவதற்கான பணியாளர்களை ஜமாஅத்திற்கு வழங்குவானாக! இதனைத் தவிர வேறு சில ஜனாஸாக்கள் உள்ளன. ஷப்பீர் சாஹிவின் ஜனாஸா மற்றும் நான் கூறப்போகின்றவர்களின் ஜனாஸா ஆகியவற்றை நான் ஜுமுஆதொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன்.

அவற்றுள் ஒன்று, நமது ஜமாஅத் முபல்லிக் மக்பூல் அஹ்மது சாஹிப். அவர் தற்போது நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாத் பிரிவில் பணியாற்றி வந்தார். இவருக்கு குடல் சம்பந்தமான பிரச்சனை இருந்து வந்தது. இறுதியில் ஜுலை 25 ம் தேதி மரணம் அடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்கள் கோட் முஹம்மது யார் சினியோடு அருகில் வசிப்பவர் ஆவார். இதன் பிறகு 1997 முதல் 2001 வரை அரபியில் சிறப்புப் பயிற்சி பெற்றார்கள. அதன் பிறகு நஸாரத் இஷாஅத்தில் பணியாற்றினார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் அரபி ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு 2007ல் சிரியா சென்றார். அங்கு அரபி மொழியில் டிப்ளமோ முடித்தார். ஹோமியோபதியை நன்கு அறிந்திருந்தார். திரும்பி வந்ததும் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸியில் நியமிக்கப்பட்டார். மிகவும் அறிவு படைத்தவர் ஆவார். இதனைப் போன்று முபல்லிக் உடைய சிறப்பு அம்சங்களும், வக்ஃபே ஸிந்தகி உடைய சிறப்பம்சங்களும் இவரிடம் இருந்தன. பிறகு நான் கூறியது போன்று ஹோமியோபதியிலும் டிப்ளமோ முடித்திருந்தார். ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார். நோயாளி எந்நேரம் வந்தாலும் முக மலர்ச்சியுடன் மருத்துவம் செய்து வந்தார். தனது நண்பர்களுடனும், பணியாளர்களுடனும் நல்ல முறையில் நடந்து வந்தார். அல்லாஹ் இவரது தர்ஜாவையும் மேம்படுத்துவானாக! இவரது பிள்ளைகளுக்கும் அல்லாஹ் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக!

மூன்றாவது ஜனாஸா ஹக்கீம் பத்ருத்தீன் சாஹிப் தர்வேஷ் காதியானின் மனைவி மெஹ்ராஜ் சுல்தானா பேகம் சாஹிபா. இவர் தனது 86 வது வயதில் ஜுலை 19ம் தேதி மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மிகவும் விருப்பத்துடனும் விசுவாசத்துடனும் தர்வேஸ் உடைய காலத்தை கழித்தார்கள். பள்ளியின் ஆசிரியர் ஆவார். ஓய்வு பெற்ற பிறகும் கூட அங்கேயே கல்வி கற்றுக் கொடுத்து வந்தார்கள். மிகவும் நல்ல உள்ளம் கொண்ட பொறுமை மற்றும் நன்றியுணர்வு கொண்ட தைரியமிக்க பெண்மணி ஆவார். காதியானின் லஜ்னா இமாயில்லாஹ்வுடைய பொதுச் செயலராகப் பணியாற்றியுள்ளார். பல்வேறு சேவைகளில் பணிபுரிந்துள்ளார்கள். ஏழை பிள்ளைகளை தனது வீட்டில் வைத்து கல்வி கற்பித்து வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடைய தர்ஜாவை மேம்படுத்துவானாக!

நான்காவது ஜனாஸா டாக்டர் முஹம்மது அஹ்மது கான் சாஹிப் ஷஹீதுடைய மனைவி மர்யம் சுல்தானா சாஹிபுடையதாகும். இவரது கணவர் முஹம்மது அஹ்மது கான் சாஹிப் கோவாட் ஜில்லாவிலுள்ள டல் பகுதியில் ஷஹீதானார்கள். மர்யம் சுல்தானா சாஹிபா ஜூலை 18, 2012 ம் தேதி மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மிகவும் கடினமாக உழைக்கக்கூடிய பெண்மணி ஆவார். அதிக அளவு தஃவத்தே இலல்லாஹ் உடைய பணியில் ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார். தியாகம் செய்யக் கூடிய பெண்மணி ஆவார். மிகவும் திடமான மன உறுதியைக் கொண்ட பெண்மணி ஆவார். இவரது தைரியம், திடமான மன உறுதி பற்றி எவ்வாறு தெரிய வருகிறதென்றால், இவரது கணவர் டாக்டர் முஹம்மது அஹ்மது கான் சாஹிப் கோவாட்டில் ஷஹீதாக்கப்பட்டார். 1957ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய காலத்தில் மர்யம் சுல்தானா சாஹிபுடைய தகப்பனார் பெயர் இனாயத்துல்லாஹ் ஆப்கானி. இவர்களது குடும்பத்தில் ஜமாஅத்தின் ஆரம்பம் இவரது தகப்பனார் இனாயத்துல்லாஹ் ஆப்கானி உடைய பைஅத் மூலம் நிறைவேறியது. அவர் முதல் கலீஃபத்துல் மஸீஹ் உடைய கையில் பைஅத் செய்தார். இனாயத்துல்லாஹ் ஆப்கானி சாஹிபின் தொடர்பு ஆப்கானிஸ்தானுடைய பகுதி கோஸ்டை சார்ந்ததாகும். அவர் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிபுடைய முரீதுகளில் (சீடர்களில்) ஒருவராவார். பிறகு இவர்களது குடும்பம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வஃபாத்திற்குப் பிறகு ஆப்கானிஸ்தானிலிருந்து காதியான் இடம்பெயர்ந்தது. பிறகு அங்கேயே முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.

மர்யம் சுல்தானா சாஹிபா பிறப்பிலேயே அஹ்மதி ஆவார். 1949ல் டாக்டர் முஹம்மது அஹ்மது கான் சாஹிப் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது மெய்க்காப்பாளரின் மகன் ஆவார். பிறகு இவர்கள் கோவாட் சென்றார்கள். அங்கு ஒருமுறை எதிரி மவ்லவி ஒருவர், இவரிடம் வந்து, ஒருவர் உடல்நலம் சுகமில்லாமல் இருந்தார். அவருக்கு மருத்துவம் செய்வதாக அழைத்துச் சென்று, அவரை அங்கு துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள்.

பிறகு இவரது சடலம் வந்த போது, இவரது வீட்டருகில் எந்தவொரு அஹ்மதியும் இல்லை. இவரது வீடு தனியாக, ஓர் அஹ்மதி வீடாக இருந்தது. சின்னச்சின்ன பிள்ளைகள் இருந்தனர். கணவர் வஸிய்யத்தும் செய்திருந்தார். வீட்டில் சடலம் கிடக்கிறது. சின்னச்சின்ன பிள்ளைகள் இருக்கின்றனர். ஆறுதல் சொல்ல யாருமில்லை. ஆலோசனை கூறக் கூட ஆள் இல்லை. தொடர்புக்கான எந்த வசதியும் அப்போது இல்லை. தொலைபேசியும் கிடையாது. அவரது கணவர் மூஸி ஆவார். அவரை ரப்வா கொண்டு செல்ல வேண்டும். பிறகு அவர் மிகவும் தைரியத்துடன் ஏதாவதொரு வழியாக ஒரு டிரக் வாடகைக்கு எடுத்து, அதில் சடலத்தை வைத்து, குழந்தைகளையும் உட்கார வைத்து நக்லா என்ற இடத்திற்கு கொண்டு வந்தார். அப்போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அங்குதான் இருந்தார்கள். அங்கு அவரது ஜனாஸா தொழப்பட்டது. பிறகு ரப்வா கொண்டு வந்தார். அதன் பிறகு தனது பிள்ளைகளுக்கு மிகவும் கடின உழைப்புடன் தர்பிய்யத் வழங்கினார். அவர்களுக்கு நல்ல தர்பிய்யத் வழங்கியும், நல்ல கல்வியறிவு புகட்டவும் முயற்சி செய்தார். இறை அருளால் அவையனைத்தும் நிறைவேறியது. அல்லாஹ் இவரது விருப்பமாகிய இவரது பிள்ளைகளையும் நன்மையில் நிலைத்திருக்கச் செய்வானாக! அதற்காகத்தான் அந்த சூழலிலிருந்து பாதுகாத்துக் கொண்டு வந்தார். அல்லாஹ் இவர்களுடைய சந்ததிகளிலும், சந்ததிகளின் சந்ததிகளிடமும் அஹ்மதிய்யத்தின் சேவகர்களை ஏற்படுத்துவானாக! உண்மையான விசுவாசத்துடன் அஹ்மதிய்யத்துடன் இணைந்திருப்பவர்களாக ஆகட்டுமாக! அல்லாஹ் இவரது தர்ஜாவையும் மேம்படுத்துவானாக! நான் கூறியது போன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAITUL FUTUH MOSQUE, LONDON.

**ON 27.07.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456